**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 144/2019</u>**

பெயர் : அந்தோணிசாமி D.W.1.

த/பெ. : ஞானபிரகாசம்

தேதி : 07.04.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u> –

23.07.2011 அன்று எனக்கும் வாதி ஜான் சேவியர் என்பவருக்கும் கிரய உடன்படிக்கை ஏற்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1ஆன ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் இல்லை. வாதி ஊரான கன்னங்குடி பஞ்சாயத்தில் நடந்த பேச்சுவார்த்தைக்கு நான் சென்றேனா என்றால் போலீசார் வற்புறுத்தியதன் பேரில் சென்றேன். மேற்படி பஞ்சாயத்திற்கு சென்று வந்த பிறகு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேனா என்றால் காவல் நிலையம் சென்றேன் புகார் கொடுக்கவில்லை. புகார் கொடுக்ககூடிய அளவிற்கு பஞ்சாயத்தில் எதுவும் நடைபெறவில்லை என்பதால் தான் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் வாதி கிரய உடன்படிக்கையில் என்னிடம் வற்புறுத்தி கையொப்பம் பெற்றதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எழுதப்படாத வெள்ளை தாளில் என்னிடம் வாதி மிரட்டி கையொப்பம் பெற்றதாக சொல்லியுள்ளேன். வாதியின் ஊரில் நடந்த பஞ்சாயத்திற்கு என்னுடன் யார் வந்தார்கள் என்றால் யாரும் வரவில்லை நான் மட்டும் தான் சென்றேன். எழுதப்படாத வெள்ளை தாளில் வாதி மிரட்டி கையொப்பம் பெற்றது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. உண்மையிலேயே எழுதப்படாத வெள்ளை தாளில் என்னிடம் வாதி கையொப்பம் பெற்றிருந்தால் நான் உடனடியாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 140/2006 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையில் உள்ள சொத்தும் தாவா சொத்தும் வெவ்வேறாவை என்றால் சரியல்ல. சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 141/2006 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையில் உள்ள சொத்தும் தாவா சொத்தும் ஒன்றானவையா அல்லது வெவ்வேறானவையா என்றால் ஒன்றானது தான்.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**